DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.86/2020**

| Deposition of the | : | PW10 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | தினகரன் | Age | : | 39 |
| F/N | : | சுப்பிரமணியன் | Occupation | : | வியாபாரம் |
| Village | : | உச்சிப்புளி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13th day of May 2024.

**13.05.2024**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளியில் குடியிருந்து கொண்டு வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 30.08.2019ம் தேதி இரவு 07.30 மணியளவில் நானும், தேவதாஸ் என்பவரும் மண்டபத்தில் இருந்து உச்சிப்புளி நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது எங்களுக்கு முன்னால் எங்கள் ஊரைச் சேர்ந்த ராஜேஸ்கண்ணா மற்றும் அவரது மனைவி வனிதா ஆகிய இருவரும் TVS XL இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. அப்போது பிரப்பன்வலசை கிழக்கே உள்ள கோல்டன் பார்க் ஹோட்டலின் கிழக்கே 500 மீட்டர் தொலைவில் எங்களுக்கு பின்னால் இராமேஸ்வரத்தில் இருந்து இராமநாதபுரம் நோக்கி வந்த TN 06 T 3994 Renault என்ற காரை பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த சதீஸ்குமார் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த ராஜேஸ்கண்ணா என்பவரின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அந்த விபத்தில் ராஜேஸ்கண்ணா மற்றும் வனிதா ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள் என்று போலீசார் விசாரணையில்

தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>** இல்லை

**<u>மறு விசாரணை :</u>** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**